வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**பிறப்பிப்பவர் : க. முனுசாமி,** M.Sc.,M.A.,B.Ed.,M.Phil.,M.B.A

ந.க.எண். 3199 / அ1 /2021 நாள். . 10 .2021

பொருள் : பள்ளிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சப்பணி – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி – 4 – 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனம் ஆணை வழங்கியமை – இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் தொடர்பாக.

பார்வை :
1. சென்னை – 6 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுதுணைச் செயலாளரின் கடிதம் எண் 1157 / PSD–H1/2019 நாள் 18–02–2019
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 195 / அ4 / இ1 / 2019 நாள் 23–02–2019
3. அரசாணை நிலை எண். 101 பள்ளிக் கல்வி (வரவு செலவுத் திட்டம் – 1 துறை நாள் 18–05–2018
4. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை ந.க.எண் 1663 / அ1 / 2019 நாள் 28–02–2019
5. காட்பாடி வட்டாரக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண் 384 / அ1 / 2021 நாள் 13–10–2021

.....

பார்வை 5ல் காணும் வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டாரக் கல்வி அலுவலரின் கடிதம் மூலம் பெறப்பட்ட கருத்துருவினை ஆய்வு செய்ததில் பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி – VI – 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறை கடிதத்தில் வேலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 4ல் காணும் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை ஆணையின்படி திருமதி. செ. சந்தானலட்சுமி என்பார் வேலூர் மாவட்டம், காட்பாடி, வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 01–03–2019 முற்பகல் பணி நியமனம் பெற்று பணிபுரிந்து வருகிறார். அன்னாரது கல்வித் சான்றுகள் உண்மைத் தன்மை பெறப்பட்டுள்ளது. காட்பாடி வட்டாரக் கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்காணும் விவரப்படி கலம் 4ல் குறிப்பிட்டுள்ள நாளில் இளநிலை உதவியாளர் பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலக விவரம் | இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை படுத்தும் நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருமதி.<br>செ. சந்தானலட்சுமி<br>இளநிலை உதவியாளர்<br>வட்டாரக் கல்வி அலுவலகம், காட்பாடி<br>வேலூர் மாவட்டம் | 01-03-2019<br>முற்பகல் | 01-03-2019<br>முற்பகல் | தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண் 75 |

மேற்படி பணியாளருக்கு இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்ட ஆண்டு / தர எண் அடிப்படையில் முன்னரிமை அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பார்வை 5ல் காணும் பள்ளிதலைமை ஆசிரியரின் கடிதம் மற்றும் பரிந்துரையின் மூலம் பெறப்பட்ட கருத்துரு உண்மைத் தன்மை இல்லை என பின்னர் கண்டறியப்பட்டால் இவ்வாணை தானாக இரத்து செய்யப்படும் என நிபந்தனையின் பேரில் இவ்வாணை வழங்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அலுவலக தலைவர் இந்த செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்கப்பட வேண்டும் மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருமதி. செ. சந்தானலட்சுமி என்பார் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி பனியாளர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

22/11/21

பெறுநர்

சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)

நகல்

1. இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) பள்ளிக் கல்வி ஆணையரகம் சென்னை -6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் தகவலுக்காக அனுப்பலாகிறது.
3. வட்டாரக் கல்வி அலுவலர் காட்பாடி தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.